**SUBORDINATE COURT, PADMANABHAPURAM**
**CASE NO.SC. 70 /2022**

**Deposition of P.W.6**

Name : டாக்டர். திருமதி. சினி பி பேன்ஸ்
S/o, D/o, W/o :
Village :
Taluk :
Calling :
Age :

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of

**Dated:02.07.2025**

**Accused** Present.

<u>முதல் விசாரணை</u>–

நான் தற்சமயம் தூத்துக்குடி மருத்துவ கல்லூரி மருத்துவமனையில் நுண்ணுயிர் மருத்துவ பிரிவில் உதவி பேராசிரியராக பணிபுரிந்து வருகிறேன். இதற்கு முன்னர் குலசேகரம் அரசு மருத்துவமனையில் பணியாற்றிய போது 22.10.2021ம் தேதி இரவு 10.58 மணிக்கு அஸ்பின் த/பெ. அமல்ராஜ் என்பவர் சிகிச்சைக்காக வந்தார். அவரை நான் விசாரித்த போது அவர் என்னிடம் அன்றைய தினம் இரவு 08.30 மணிக்கு தெரிந்த ஒரு நபர் செருப்பாலூர் கிணற்று பக்கம் வைத்து கம்பால் தாக்கியதாக கூறினார். அவருக்கு முதுகு மற்றும் இடது கையில் அடிபட்டதாக கூறினார். அவரை பரிசோதித்த போது வயிற்றில் வலி இருப்பதாக கூறினார். முதலுதவி சிகிச்சை வழங்கி அவரை ஆசாரிப்பள்ளம் அரசு மருத்துவ கல்லூரி மருத்துவமனைக்கு சிகிச்சைக்காக அனுப்பி

.2.

வைத்தேன். அங்கு அவருக்கு சி.டி. ஸ்கேன் எடுக்கப்பட்டு கல்லீரலில் காயம் உள்ளதாக அறிக்கை வழங்கப்பட்டது. அதன் அடிப்படையில் அவருக்கு ஏற்பட்ட காயம் கொடுங்காயம் என சான்று வழங்கினேன். அந்த காயச்சான்று அ.சா.ஆ.3. காவல் ஆய்வாளர் என்னை விசாரித்தார்.

<u>எதிரி தரப்பு குறுக்கு விசாரணை</u>

எதிரி ஆஜர். எதிரி தரப்பு வழக்கறிஞர் ஆஜரில்லை. எதிரி தரப்பு வழக்கறிஞர் நீதிமன்ற பணி புறக்கணிப்பில் ஈடுப்பட்டுள்ளார். எனவே, சாட்சி குறுக்கு விசாரணை செய்யப்படவில்லை.